**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை.**
**முன்னிலை: திரு.S. முகம்மது யூசுப் நவாஸ், B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை.**

2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10-ஆம் நாள் புதன்கிழமை

<u>இடைக்கால மனு எண். 2/2025</u>
<u>இன்</u>
<u>அசல் வழக்கு எண். 54/2022</u>

சுரேஷ்கண்ணன் ..... மனுதாரர்/வாதி

/ எதிர் /

1.வணங்காமுடி ...1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி
2.ஆர்.லெனின்
3.மாவட்ட ஆட்சியர், சிவகங்கை
4.சார்பதிவாளர், மானாமதுரை .....2-4 எதிர்மனுதாரர்கள்/
2-4 Proposed பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பு 21.11.2025 தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.ஹபிபுர் ரஹ்மான் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.அக்கினிராஜ் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.கணேசன் அவர்கள் ஆஜராகியும், 3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.M.துரைப்பாண்டி அவர்கள் ஆஜராகியும், எதிருரை தாக்கல் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளநிலையில், இருதரப்பு வாதம் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

<u>**உத்தரவு**</u>

**1.** மனுதாரர் தரப்பில் ஆர்டர் 6 ரூல்.17, 18 உரிமையியல் விசாரணை சட்டத்தின் படி மனுவில் கண்ட விபரப்படி பிராதை சீர்திருத்தம் செய்ய அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்று அபிடவிட் தாக்கல் செய்து இம்மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**2. <u>மனு அபிடவிட்டின் சுருக்கம்:-</u>**

மனுவில் கண்ட 2 முதல் 4 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 2 முதல் 4 பிரதிவாதிகளாக சேர்க்க மனு தாக்கல் செய்து இ.ம.எண்.1/2024 என்ற எண்ணில்

26.09.2025ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், அதன்படி மனுவில் கண்ட விபரப்படி பிராதை சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், எனவே அதைப்பொருத்து மனுவினை சீர்திருத்தம் செய்ய அனுமதி வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4. இம்மனுவில் தீர்க்க வேண்டிய பிரச்சனை: இம்மனு அனுமதிக்கத்தக்கதா/இல்லையா என்பதேயாகும்:-**

மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணம் ஏற்கத்தகுந்த நிலையில் உள்ளது. ஏற்கனவே இடையீட்டு மனு எண்.1/2024, நாள் 26.09.2025ம் தேதியன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் **Consequential Amendment** ஆன இம்மனுவை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

**மேற்கண்ட காரண காரியங்களின் அடிப்படையில் மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025-ம் ஆண்டு டிசம்பர் 10 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.12.10 16:59:43 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.12.10 17:00:00 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை

**District Munsif Court**

**Manamadurai**

**IA.No. 2/2025**
**in**
**OS.No. 54/2022**

**Order**

**Dated 10.12.2025**